


# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

POLICY BRIEF

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனம் (Law and Society Trust), கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஆகியவை மக்களின் சுகாதார உரிமை மீது ஏற்படுத்திய தாக்கத்தை ஆராயும் வகையில் ஒரு ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வு, குடிமக்கள் மற்றும் அரசாங்கத்திற்கிடையேயும், அதேபோல் குடிமக்களுக்கிடையேயும் உள்ள சமூக ஒப்பந்தத்தை மீண்டும் சிந்திக்க வேண்டிய அவசியத்தை நமக்கு உணர்த்தியது. இவ்வாறான சிந்தனை மற்றும் கூட்டு முயற்சிகள் மூலம், நாம் அனைவரும் மனித பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்ய முடியும். இது சுகாதாரம், கல்வி, வாழ்வாதாரம், அமைதியான இணை வாழ்வு மற்றும் நல்லாட்சிக்கான உரிமை ஆகியவை அனைவருக்கும் கிடைக்க உதவும். மேலும், அனைவரும் தங்களின் அடிப்படை மனித உரிமைகளையும் சுகாதார உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய வகையில், மனித மற்றும் நிதி வளங்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்து திறந்த உரையாடல்களும், புதிய யோசனைகளும், திட்டங்களும் தேவைப்படுகின்றன. இந்த ஆய்வு மூலம், நோயாளிகளின் உரிமைகள் குறித்த ஒரு சாசனம், பொது சுகாதார அவசர நிலைகளை மேலாண்மை செய்தல், மற்றும் மனநலப் பிரச்சினைகளை மேம்பட்ட முறையில் அங்கீகரித்து சிகிச்சையளித்தல் போன்ற முக்கியமான பார்வைகள் வெளிப்பட்டுள்ளன.

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

info@lstlanka.org

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

## அறிமுகம்

பல்வேறு உலகளாவிய மானிட அபிவிருத்திச் சுட்டெண்களின் செயலாற்றுகையின் பின்னணியில் வைத்து நோக்கும் பொழுது, இலங்கையின் சுகாதார முறைமை அதன் சக நாடுகளுக்கு மத்தியில் தெளிவாகவே முன்னணியில் இருந்து வரும் ஒரு முறைமையாக இருந்து வருவதனை காண முடிகிறது. அதாவது, ஒரே வருமான மட்டங்களைக்  கொண்டிருக்கும் நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இந்நிலைமை தென்படுகிறது. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி, தொடர்ச்சியாக இந்நிலை நிலவி வந்திருப்பதுடன், வரிப் பணத்தின் மூலம் நிதியிடப்படும், இலங்கையர்கள் அனைவரும் சமத்துவமான விதத்தில் அணுகக் கூடிய ஒரு சுகாதார பராமரிப்புச் சேவையை இலங்கை தன்னகத்தே கொண்டுள்ளது,

எனினும், காலப் போக்கில் குறிப்பாக 1978 தொடக்கம் ஆரம்பமாகிய பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகளுடன் இணைந்த விதத்தில் இலங்கை ஒரு கலப்பு முறையை நோக்கி நிலைமாற்றமடைந்ததுடன், அதனையடுத்து வரிப் பணத்தினால் நிதியளிக்கப்பட்ட சுகாதார பராமரிப்புச் சேவைகளும், அதே போல பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் தனியார் சுகாதார சேவைகளும் சமாந்தரமாக இருந்து வந்துள்ளன. இன்று நாட்டின் மொத்த சுகாதாரச் செலவினத்தில் சுமார் அரைவாசிப் பகுதி மக்கள் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் சுகாதாரச் செலவுகளை பிரதிநிதித்துவம் செய்கிறது. இந்தக் கலப்பு முறையின் வளர்ச்சி அரசாங்க சுகாதார நிறுவனங்களுக்கூடாக சுகாதார பராமரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்பவர்கள் மீது கணிசமான அளவிலான ஒரு தாக்கத்தை எடுத்து வந்தது. அதன் நீட்சியாக சுகாதார உரிமையை அனுபவிக்கும் அவர்களுடைய நிலைமையிலும் அது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

கொவிட் பெருந்தொற்றின் போதும், அதனையடுத்து வந்த பொருளாதார நெருக்கடி காலப் பகுதியின் போதும் இலவச சுகாதார சேவைகளை பெற்றுக் கொள்ளும் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்பின் தரத்தில் நிலவி வந்த ஏற்றத்தாழ்வை மிகவும் தெளிவான விதத்தில் அவதானிக்க முடிந்தது. மக்கள் ஆணைக்குழுவின் ஆய்வு முடிவுகள் இந்த ஏற்றத்தாழ்வுகளை விரிவாக எடுத்துக் காட்டியிருந்தது. இந்தக் கொள்கை ஆவணம் அதனை அடிப்படையாகக் கொண்டு, சுகாதார பராமரிப்பு முறைமை மற்றும் சுகாதாரக் கொள்கை மற்றும் சேவை வழங்குதல் என்பவற்றுக்குள் “நோயாளி” என்பன தொடர்பான எண்ணக்கரு முழுவதுமாக மீள உருவாக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

## “நோயாளி” என்பவர் யார்?

ஒரு நோயாளி என்பவர் சுகாதார பராமரிப்புச் சேவைகளின் கவன மையத்தில் இருந்து வருவதுடன், மருத்துவர்கள், தாதிமார் மற்றும் ஏனைய விசேட நிபுணர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய சுகாதார பராமரிப்புத் துறை தொழில்வாண்மையாளர்களின் மருத்துவ கவனிப்பை பெற்றுக் கொள்பவர் அல்லது திட்டவட்டமான ஒரு சுகாதார நிலைமை அல்லது வியாதிக்குச் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக காத்திருப்பவர் ஆவார்.

பெற்றுக் கொள்ளப்படும் சுகாதார பராமரிப்புச் சேவைகள் “சிகிச்சை” என விவரிக்கப்படுவதுடன், இந்தச் சிகிச்சை நோயாளிகளின் நிலைமையை கவனத்தில் எடுப்பதற்கென பல்வேறு விதமான நடைமுறைகள், மருந்துகள் மற்றும் சிகிச்சை முறைகள் என்பவற்றை பிரயோகிப்பதுடன் சம்பந்தப்பட்டுள்ளது.

நோயாளிகள் நோயைக் கண்டறியும் செயன்முறையிருந்து வருபவர்களாக, நடைமுறைகளுக்கு காத்திருப்பவர்களாக அல்லது தொடர்ச்சியான பராமரிப்புக்கு தயாராகுபவர்களாக அல்லது ஒரு திட்டவட்டமான சுகாதார நிலைமைக்கு அல்லது வியாதிக்கு சிகிச்சையை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பாரத்திருப்பவர்களாக இருக்க முடியும். இந்தப் பராமரிப்பு அல்லது சிகிச்சை வைத்தியசாலைகளில், சிகிச்சை நிலையங்களில் அல்லது வீட்டில் வழங்கப்பட

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

முடியும். வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் அரசு அல்லது தனியார் சுகாதாரப் பராமரிப்புச் சேவை வழங்குனர்களினால் முகாமைத்துவம் செய்யப்பட முடியும்.

ஒரு நோயாளி பொதுவாக உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் எளிதில் பாதிக்கப்படக் கூடியபவராக இருந்து வருகிறார். நோயாளி சுகாதார பராமரிப்புச் சேவைகளை பெற்றுக் கொள்பவர் என்ற முறையில் அவருடைய குறிப்பிட்ட உடல்நலக்குறைவு மற்றும் ஏனைய பலவீனங்களின் அடிப்படையில் அவருக்கு பராமரிப்பு தேவைப்படுகிறது□ அல்லது ஒரு குறிப்பிட்ட சுகாதார நிலைமை அல்லது உடல்நலக்குறைவுக்கான சிகிச்சைக்காக அவர் காத்திருக்கிறார். எனவே, அந்த அடிப்படையிலேயே "நோயாளியை மையமாகக் கொண்ட" பராமரிப்பு அவசியம் எனக் கூறப்படுகிறது. இருப்பினும், "நோயாளி" பற்றிய பார்வை, சார்பு, தேவை மற்றும் பாதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே, அந்த நபரிடமிருந்து முகமைத்தன்மையை நீக்குகிறது. இது சுகாதாரப் பராமரிப்பு வழங்குநருக்கும் பெறுநருக்கும் இடையிலான அதிகார படிநிலை உறவை வலுப்படுத்துகிறது.

## சுகாதாரப் பராமரிப்பு தொடர்பான நவீன அணுகுமுறை:

வாடிக்கையாளர் அல்லது சேவைநாடி: ஒரு சில மருத்துவ கலாசாரங்கள் நோயாளியை சுகாதாரத் துறையின் ஒரு "வாடிக்கையாளராக" அல்லது "சேவைநாடியாக" கருதுகின்றன. அந்த நிலையில், அவர் உயர் தரம் வாய்ந்த சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான உரித்தினைக் கொண்டுள்ளார். அத்துடன், சுகாதாரப் பராமரிப்பை வழங்குபவர்கள் "வழங்குனர்கள்" என்ற முறையில் அவ்விதம் வழங்கப்படும் சேவைகளுக்கு பொறுப்புக் கூற வைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், இன்றைய நவீன சுகாதார பராமரிப்புத் துறையில் நோயாளர்கள் தமது ஆரோக்கியப் பயணத்தில் பெருமளவுக்கு ஒரு முனைப்பான வகிபாகத்தை வகிக்க வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுவதுடன், அதற்காக அவர்கள் வலுவூட்டப்படுகின்றனர். இந்த நகர்வு பெறுபேறுகளை விருத்தி செய்யும் அதே வேளையில், ஒட்டுமொத்த சுகாதார பராமரிப்பு முறையின் செயல்திறனையும் விருத்தி செய்கின்றது.

இனி செயலற்ற பெறுநர் அல்ல: சுகாதார பராமரிப்புத் துறை பெருமளவுக்கு சிக்கலான மற்றும் தொழில்நுட்பத்தினால் நெறிப்படுத்தப்படும் ஒரு துறையாக மாறி வரும் நிலையில், நோயாளிகளின் எதிர்ப்பார்ப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவும் மாற்றமடைந்துள்ளன. முனைப்பான ஒரு மனப்பாங்கினை பின்பற்றுவதன் மூலம் நோயாளர்கள் சிகிச்சை தொடர்பான செலவுகள் மற்றும் அதன் பெறுபேறுகள் என்பன குறித்து தமக்கு மேலும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும் என்றும், ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட சுகாதாரப் பிரச்சினைகளை கவனத்தில் எடுப்பதற்கென சுகாதாரப் பராமரிப்பு ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டு நோயாளிகள் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை வழங்குவோர்களுக்கு சவால் விடுத்து வருகின்றனர்.

சுகாதாரத்தின் சுய முகாமையாளர்: நோயாளர்கள் இப்பொழுது தமது சுகாதார நிலைமைகள், சிகிச்சைத் தெரிவுகள் மற்றும் தடுப்பு வழிமுறைகள் என்பவற்றை புரிந்து கொள்வதற்கு தம்மை இயலச் செய்யக் கூடிய கல்வி வளங்களை அணுகக் கூடிய நிலையில் இருந்து வருகிறார்கள். தகவல்களை தெரிந்து வைத்திருப்பதற்கென ஒரு முன்முயற்சியை மேற்கொள்வதன் மூலம் நோயாளிகள் சுகாதார பராமரிப்புச் சேவைகளை வழங்குபவர்களுடன் தொடர்புகளை பராமரித்து வரும் அதே வேளையில் சிறந்த முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக இருந்த வருகின்றார்கள்.

வினைத்திறன்மிக்க விதத்தில் தொடர்பாடல்களை மேற்கொள்பவர்கள்: நோயாளர்கள் நாம் தற்பொழுது உட் கொள்ளும் மருந்துகளின் பட்டியல், நோய்க்

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

குறிகள் மற்றும் திட்டவட்டமான கரிசனைகள் என்பவற்றின் பட்டியல்களுடன் அறிந்து, தயார் நிலையில் மருத்துவர்களை சந்திக்க வருகிறார்கள். அவர்கள் கேள்விகளை கேட்பதுடன், சேவை வழங்குனர்களுடன் செலவிடும் நேரத்தை உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தம்முடன் மிகவும் தெளிவான விதத்தில் தொடர்பாடல் மேற்கொள்ளப்பட அவர்கள் விரும்புகிறார்கள். குழப்ப நிலை தடுக்கப்பட வேண்டுமெனவும், துல்லிய நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும், பராமரிப்புச் சேவை ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் தமது விருப்பத்தை தெரிவிக்கிறார்கள்.

தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்பவர்கள்: இப்பொழுது பெருந்தொகையாக நோயாளர் இணையதளங்கள், சுகாதார சேவைகள் மற்றும் டெலி மருத்துவக் கருவிகள் என்பன கிடைத்து வருவதுடன், அது நோயாளர்கள் தகவல்களை அறிந்து வைத்திருப்பதனை இலகுபடுத்தியிருக்கின்றது. பரிசோதனை பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்வதற்கும், இணையதளங்களுக் கூடாக அடுத்து வரவிருக்கும் சந்திப்புக்களை தெரிந்து கொள்வதற்கும், சுகாதார செயலிகளைப் பயன்படுத்தி தமது அடிப்படை அம்சங்கள் , சுகாதார தரவுகள் என்பவற்றைக் கண்டறிந்து கொள்வதற்கும் இந்தக் கருவிகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். இணையத்துக்கூடாக அவர்கள் மருத்துவ ஆலோசனையை பெற்றுக் கொள்வதுடன், கட்டுரைகளை பரிசீலனை செய்வதன் மூலம் சுகாதார சேவைகளை வழங்குபவர்களுக்கு தமது கரிசனைகளை எடுத்துக் கூற முடியும். நோயாளிகள் தொடர்பாடல் இடைவெளிகளை பூர்த்தி செய்யக் கூடியவர்களாகவும், தமது பராமரிப்பு அணியினருடன் தொடர்புபட்டவர்களாகவும் இருந்து வருகின்றார்கள்.

## கொவிட் பெருந்தொற்று காலத்தில் நோயாளர்கள்

தாம் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது ஏற்கனவே மருத்துவ நிலைமைகளில் இருந்து வந்தாலும் சரி கொவிட் தொற்று அனைத்து மக்கள் மீதும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தி வந்தது. மொத்தக் குடித்தொகையினரும் தாம் "நோயாளர்களாக இருந்து வர முடியும்" என்பதனை உணர்ந்ததுடன், பதற்றத்துடன் வாழ்ந்து வந்தார்கள். உண்மையிலேயே பலர் நோயாளர்களாக மாறியதுடன், நோய் தொற்றைப் பெற்றுக் கொண்டார்கள் அல்லது ஏற்கனவே இருந்த நிலைமைகள் பெருந்தொற்றின் பின்னணியில் மிகவும் தீவிரமடைந்தன. மக்கள் தடுப்பூசியை பெற்றுக் கொண்டார்கள் என்ற விடயம் அவர்களை "நோயாளிகளாக" ஆக்கவில்லை. ஆனால், தமது ஆரோக்கியம் (உடல் மற்றும் உள ஆரோக்கியம்) தடுப்பூசிகள் மூலம் பாதிக்கப்பட்டிருப்பதாக பலர் நம்பினார்கள். இந்த தடுப்பூசி முழுவதுமாக சரி பார்க்கப்பட்டு, பரீட்சித்துப் பார்க்கப்படாத நிலையில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதாகக் கருதி பலர் உணர்வு ரீதியாக பாதிப்படைந்திருந்தார்கள். நீண்ட கால கட்டம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை பதற்ற நிலைமை உருவாக்கியதுடன், மனநலம் தொடர்பான பிரச்சினைகளையும் எடுத்து வந்தது.
பெருந்தொற்று மற்றும் அதற்கு அப்பால் உள்ள பரந்த பின்புலத்திற்குள் இந்தக் கொள்கை ஆவணம் நோயாளிகளின் பலவீன நிலைமைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை ஆய்வு செய்வதுடன், நோயாளிகளின் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்க முடியும் மற்றும் இந்த உரிமைகளை மேம்படுத்துவதில் சுகாதாரத் துறையின் வினைத்திறனை எவ்வாறு உயர்த்த முடியும் போன்ற விடயங்களையும் கவனத்தில் எடுக்கின்றது. பெருந்தொற்று காலப் பிரிவின் போது சுகாதார சேவைகளின் விநியோகம் தொடர்பான அனுபவங்கள் குறித்த சமூகத்தின் பிரதிபலிப்புக்களிலிருந்து இந்த ஆய்வு விடயங்களை பெற்றுக் கொண்டிருப்பதுடன், சீர்த்திருத்தங்களுக்கான

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

தேவை மற்றும் திட்டவட்டமாக தேவைப்படும் சீர்த்திருத்த வகைகள் என்பவற்றை ஊர்ஜிதம் செய்வதற்கும் இந்தத் தகவல்களை பயன்படுத்தியுள்ளது.

## சுகாதாரத்திற்கான பொதுமக்களின் உரிமையை சாதித்துக் கொள்ளல் அங்கீகரித்தல் மற்றும் நோயாளிகளின் “சுகாதாரத்திற்கான உரிமைகளை” சாதித்துக் கொள்ளல்

1966 ஆம் ஆண்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் குறித்த சர்வதேச சமவாயம் (ஐஊநுளுசு) சேமநலன், சமூகப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி என்பவற்றுக்கான உரிமைகளையும் (உறுப்புரை 9 மற்றும் 10), சுகாதாரத்திற்கான உரிமையையும் (உறுப்புரை 12) ஸ்தாபித்தது. இலங்கை இந்த சமவாயத்திலும், ஏனைய சர்வதேச சமவாயங்களிலும் கையொப்பமிட்டுள்ளது. மேலும், இலங்கையின் அரசியல் யாப்பு சமூகக் கொள்கை தொடர்பான நெறிப்படுத்தல் கோட்பாடுகளுக்கூடாக (உறுப்புரை 27) நீதியான ஒரு சமூக ஒழுங்கின் ஸ்தாபிதத்தை உறுதிப்படுத்துகின்றது. இந்த சமூக ஒழுங்கில் உற்பத்தி, விநியோக மற்றும் பரிமாற்றச் சாதனங்கள் அரசிடம் ஒன்று திரண்டிருக்கவோ மத்தியமயப்படுத்தப்பட்டிருக்கவோ மாட்டாது (சமூக, பொருளாதார மற்றும் அரசியல்) நீதி தேசிய வாழ்க்கை தொடர்பான அனைத்து நிறுவனங்களையும் நெறிப்படுத்தும் மிகவும் வினைத்திறன்மிக்க சமூக ஒழுங்கொன்றை நிறுவி, பாதுகாப்பதன் மூலம் மக்களின் சேமநலன் மேம்படுத்தப்படும் அனைத்துப் பிரஜைகள் தொடர்பாக அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் போதியளவிலான ஒரு வாழ்க்கைத் தரம் ஸ்தாபிக்கப்படும் இது போதியளவிலான உணவு, உடை மற்றும் வீட்டு வசதி, வாழ்க்கை நிலைமைகளில் தொடர்ச்சியாக ஏற்படும் விருத்தி நிலை, ஓய்வு, சமூக மற்றும் கலாசார வாய்ப்புக்கள் என்பவற்றை முழுமையாக அனுபவித்தல் என்பவற்றையும் உள்ளடக்கும் அரசு சமூகப் பாதுகாப்பு மற்றும் சேமநலன் என்பவற்றை உறுதிப்படுத்தும் குடும்பம் சமுதாயத்தின் அடிப்படை அலகாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை அங்கீகரித்து, அதனைப் பாதுகாக்கும் சிறுவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் ஆகியோரின் முழுமையான அபிவிருத்தி, உடல், உள, ஒழுக்க, சமய மற்றும் சமூக அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டும், அவர்களை சுரண்டல் மற்றும் பாரபட்சம் என்பவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் அவர்களின் நலன்களை அக்கறையுடன் மேம்படுத்தும்.

அரச கொள்கையின் நெறிப்படுத்தும் கோட்பாடுகள் மற்றும் அடிப்படை கடமைகள் என்பன வலுவுக்கிட முடியாதவையாக இருந்து வந்த போதிலும், அவை அரசாங்கத்தின் வழிகாட்டுக் கோட்பாடுகளாக இருந்து வருவதுடன், பிரஜைகளின் எதிர்பார்ப்புக்களின் அடிப்படைக் கூறாகவும் இருந்து வருகின்றது. இந்தப் பின்புலத்தில், சுகாதாரத்திற்கான உரிமை இலங்கையில் ஒரு அரசியல் உரிமை என்ற முறையில் பிரஜைகளின் உள்ளத்தில் வேரூன்றியிருக்கிறது. இன்று இந்த உரிமையின் ஆதார அம்சமான அனைவருக்கும் இலவசமான சுகாதாரப் பராமரிப்பு என்ற வசதி சிறுகச் சிறுக குறைக்கப்பட்டு வருகிறது ஆனால், அதனை முழுமையாக நீக்கி விடுவது என்பது ஒரு அரசாங்கத்தைப் பொருத்தவரையில் எவ்வித்ததிலும் அனைவருக்கும் சாத்தியப்பட மாட்டாது.

சர்வதேச சமவாயங்களும், அரச கொள்கைளை நெறிப்படுத்தும் கோட்பாடுகளும் இந்த உரிமைகளை சாதித்துக் கொள்ளும் பொருட்டு பொதுச் சுகாதார சேவைகளை வழங்கும் பொறுப்பினை அரசு மீது சுமத்துகின்றன.

இலங்கை தொடர்பான சுகாதார பராமரிப்பின் தரம் மற்றும் பாதுகாப்பு என்பன குறித்த தேசியக் கொள்கைக்கு அமைச்சரவை 2015 ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கியது. சிகிச்சை மற்றும் நோய் தடுப்புச் சேவைகளை சிறப்பாக வழங்குதல் மற்றும் நாடு தழுவிய ரீதியில் திட்டவட்டமான நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாக அதற்கான உத்திகளை அமுலாக்குதல் என்பன தொடர்பான அரசாங்கம் மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் வகிபாகங்கள்

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றை அடையாளம் காண்பதன் மூலம் அதன் பிரஜைகளுக்கு உயர்ந்த மட்டத்திலான ஒரு வாழ்க்கைத் தரத்தை பெற்றுக் கொடுப்பது அதன் நோக்கமாகும். திட்டவட்டமான நிகழ்ச்சித்திடங்களுக்கு ஊடாக நாடளாவிய ரீதியில் உத்திகளை அமுல் செய்வதும் அதன் நோக்கமாக உள்ளது. எவ்வாறிருப்பினும், பெருந்தொற்று அனுபவங்கள், பொருளாதார நெருக்கடி, குடிசனவியல் தொகுப்பு மற்றும் குடித்தொகை நகர்வுகள் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் மற்றும் ஏனைய காரணிகளின் அடிப்படையில் இந்த உத்தியை மீளாய்வு செய்வதற்கும், அதற்குள்ளேயும் அதற்கூடாகவும் மேலும் திட்டவட்டமான விவரங்களை எடுத்து விளக்குவதற்கும் இப்பொழுது காலம் கனிந்துள்ளது.

தற்பொழுது, இலங்கையின் சுகாதாரப் பராமரிப்பு முறைமை, குறிப்பாக வரையறுக்கப்பட்ட மூலவளங்களுக்குள் சுகாதாரப் பராமரிப்பு முறைமைகளின் மற்றும் பாதுகாப்பு என்பவற்றைப் பராமரிப்பதில் பாரிய மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. (மருத்துவர்கள் மற்றும் தாதிமார் போன்ற) சுகாதாரப் பராமரிப்பு தொழில்வாண்மையாளர்கள் சுகாதாரப் பராமரிப்பை வழங்கும் தனியார் துறைக்கு நகர்ந்து செல்கின்றனர் அல்லது பாரிய ஒரு ஊழியர் தட்டுப்பாட்டை உருவாக்கும் விதத்தில் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து செல்கின்றனர். சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கையின் மீது திணிக்கப்பட்ட கட்டமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் பொதுச் செலவுகளைக் குறைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளும் அதே வேளையில், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளின் செலவுகள் வெட்டுக்கள் மேற்கொள்ளப்படக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை சர்வதேச தரநியமங்களுடன் பொருந்திச் செல்வதற்கும், மருத்துவச் சேவைகளை விநியோகிப்பதில் ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்து செல்வதற்கும் அதன் அணுகுமுறைகளை திருத்தியமைக்க வேண்டியிருக்கிறது. இன்றைய அணுகுமுறை நோயாளியை மையமாகக் கொண்ட அணுகுமுறையாக இருந்து வர வேண்டியிருப்பதுடன், செலவுச் சிக்கனத்தை ஏற்படுத்தும் பொருட்டு பணத்தை சேமிக்க வேண்டிய அதே வேளையில், தரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வினைத்திறன்மிக்க விதத்தில் முகாமைத்துவம் செய்வதுடன் அதனை சமநிலையில் பராமரிக்க வேண்டியிருக்கிறது. இந்த அணுகுமுறைக்கு நிர்வாகிகள், மருத்துவ சிகிச்சை வழங்குபவர்கள், தாதிமார் மற்றும் ஆளணியின் ஏனைய பிரிவினர் ஆகியோரின் முழுமையான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு ஒட்டுமொத்த துறையும் இணைந்து வேலை செய்தால் மட்டுமே இதன் வெற்றி சாத்தியப்படும். சாதனைகள் மற்றும் விருத்தி நிலைமைகள் என்பன செலவுகள், சேமிப்புக்கள் மற்றும் சுகாதாரத் துறையின் சேவைகளை பயன்படுத்தி வருபவர்களின் மனத் திருப்தி என்பவற்றின் அடிப்படையில் அளவிடப்பட்டு, கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கையின் சுகாதாரத் துறையின் சீர்த்திருத்த நிகழ்ச்சிநிரல் உலக சுகாதார தாபனம் (ஹூர்மு) போன்ற நிறுவனங்களினால் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பவற்றை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.
மேலும், தமது சுகாதாரப் பராமரிப்பு முறைமைகளில் சீர்த்திருத்தங்களை முன்னெடுத்து வரும் ஏனைய நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ள “சிறந்த நடைமுறைகளை” அது கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

## சுகாதார பராமரிப்புத் துறையுடனான தமது அனுபவங்கள் குறித்து மக்கள் என்ன சொல்கிறார்கள்?

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தினால் (டுளுவு) நடத்தப்பட்ட பொதுமக்களுக்கான கலந்தாலோசனைகளின் போது தகவல் தந்தவர்கள் சுகாதாரத் துறை தம்மை மிகச் சிறந்த விதத்தில் மன்றாடிக் கேட்பவர்களாக நடத்தியதாகவும், மிக மோசமான விதத்தில் தம்மை விலங்குகளாகவும் நடத்தியிருப்பதாக கருத்துத் தெரிவித்திருந்தார்கள். மக்களின் வரிப் பணத்தின் மூலம் அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்படும் சுகாதாரத் துறை பராமரிப்புத் தொடர்பாக ஒரு விசேட கடமையை கொண்டிருக்கிறது என்பதை அங்கீகரிக்கத் தவறியிருக்கிறது என அவர்கள் சொன்னார்கள்.

சுகாதாரத் துறையைச் சேர்ந்த கனி'ட ஆளணியினர் தமக்கு இழைத்து வரும் துன்புறுத்தல்கள் குறித்து இலக்குக் குழு கலந்துரையாடல்களில் தகவல் தந்தவர்கள் பலர் விவரித்திருந்தார்கள். அந்த விடயத்தை பொருத்தவரையில் வைத்தியர்களிலும் பார்க்க பராமரிப்புப் பணியாளர்களும், தாதியர்களும் மிகவும் மோசமான விதத்தில் நடந்து கொண்டதாக கூறப்பட்டது! சுகாதார பராமரிப்பை வழங்குபவர்கள் தாம் பராமரிப்பு தொடர்பான தமது கடமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சேவையை வழங்கி வருகின்றோம் என்பதனை அங்கீகரிக்கத் தவறியுள்ளார்கள் எனவும் கூறப்பட்டது.

இந்த முறைமை மிக மோசமான விதத்தில் உருவாக்கப்பட்டிருப்பதாகவும், வைத்தியர்களை சந்திப்பதற்காக டோக்கன்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்றும் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். வைத்தியர்கள் உரிய நேரத்தில் வருவதில்லை அதனால் பொதுமக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பல மணித்தியாலங்கள் காத்திருந்து விட்டு, வைத்தியர்களை பார்ப்பதற்காக பிறிதொரு தினத்தில் மீண்டும் வர வேண்டிய நிலைமை ஏற்படுகிறதுநோயாளிகள் அல்லது நோயாளிகளுடன் வருபவர்கள் இளம் குழந்தைகள் அல்லது முதியவர்களைப் பராமரிப்பவர்களாகவும் இருக்கலாம், ஆனால் நீண்ட மற்றும் அர்த்தமற்ற தாமதங்களுக்கு அவர்களை கட்டாயப்படுத்தும்போது அவர்களின் தனிப்பட்ட காரணிகளுக்கு எந்தக் கவனமும் செலுத்தப்படுவதில்லை. இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் ஊழியர்கள் பொதுமக்களை பாரபட்சமான விதத்தில் நடத்தி வருவதும், அத்தகைய மனப்பாங்குகளாகும். செல்வச் செழிப்பு மிக்கவர்களை ஒரு விதத்திலும, வறிய மற்றும் விளிம்பு நிலை சமூகங்களைச் சேர்ந்தவர்களை வேறொரு விதத்தில் கண்ணியக் குறைவாகவும் அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

## பெருந்தொற்றின் போது மற்றும் அல்லது பொருளாதார நெருக்கடியின் போது நோயாளியை மையமாகக கொண்ட பராமரிப்பை அளவிடுதல்: பரிசீலனைக்கு எடுக்க வேண்டிய விடயங்கள்

நோயாளியை மையமாகக் கொண்ட பராமரிப்பை அளவிடுவது தொடர்பாகவும், போதிய தகவல்கள் இல்லாத நிலையிலும், அழுத்தங்களின் கீழும் மிக விரைவாக முடிவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் ஒரு பொதுச் சுகாதார நெருக்கடி நிலைமையின் பின்னணியில் சுகாதாரத்திற்கான உரிமையை பாதுகாத்துக் கொள்வதில் பல விடயங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதே போல, ஒரு பொருளாதார நெருக்கடியின் போதும் சுகாதாரச் சேவைகளின் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. ஒரு சில தலையீடுகளை மேற்கொள்வதற்கு விரிவான நிதிசார் முதலீடுகள் அவசியப்படாதிருக்கலாம் ஆனால், அவை நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செய்ய முடியும்.

தாம் புரிந்து கொள்ளும் மொழியில் பொதுமக்களுக்கு போதியளவிலான தகவல்கள் கிடைப்பதில்லை என்பது குறித்து கலந்துரையாடல்களின் போது மக்கள் கரிசனை

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

தெரிவித்திருந்தார்கள். மும்மொழிக் கொள்கை நடைமுறையில் ஒரு செயற்படாத விடயமாக இருந்து வருவதுடன், இதன் காரணமாக பெருந்தொகையான மக்கள் சுகாதாரம் சம்பந்தப்பட்ட தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலைமை தோன்றியுள்ளது. மேலும், தாம் போதியளவில் உள்வாங்கப்படவில்லை என்ற உணர்வும் அவர்களுக்கு மத்தியில் காணப்படுகிறது.

பெருந்தோட்டத் துறையை பொருத்தவரையில் இந்நிலைமை மிக மோசமாக காணப்படுகிறது. அங்கு வாழும் தமிழ் பேசும் குடித்தொகையினர், தமது தாய் மொழியில் தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடிய அனைத்து மட்டங்களிலுமான சுகாதாரத் துறை தொழில்வாண்மையாளர்களை அணுக முடியாத நிலைமை காணப்படுகிறது. மேலும், வர்க்கம் மற்றும் சமூகப் பூர்வீகம் என்பவற்றின் அடிப்படையில் தாம் மிகவும் கண்ணியக் குறைவான விதத்தில் நடத்தப்பட்டிருப்பதாக பல நோயாளிகள் முறைப்பாடு செய்திருந்தார்கள்.

அது தவிர, ஆலோசனை மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆதரவு என்பவற்றை வழங்கி வரும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பொது நிர்வாகிகள் ஆகியோர், பொருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்கும் பொழுதும், அவர்கள் அந்த ஆலோசனைக்கு இணங்கியொழுக வேண்டுமென எதிர்ப்பார்க்கும் சந்தர்ப்பத்திலும் பெருந்தோட்டத் துறை மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் வேலை நிலைமைகள் என்பன குறித்து ஒன்றும் அறியாதவர்களாக இருந்து வருகிறார்கள்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்த கூலி அடிப்படையில் தங்கள் வாழ்க்கையை நடத்தி வருவதுடன், முழு அடைப்புக்கள் மற்றும் ஊரடங்கு சட்டம் என்பன அமுல் செய்யப்பட்ட கால கட்டத்தில் அவர்கள் தமது வருமானத்தை இழந்தார்கள். மேலும், அவர்கள் சன நெரிசல் நிறைந்த “வரிசை (லைன்) அறைகளில்” வசித்து வந்த காரணத்தினால் நோய் தொற்றுக்கு உள்ளானவர்களை தனிமைப்படுத்த முடியாத நிலையும் அங்கு நிலவி வந்தது.

பெருந்தொற்று நிலவிய காலப் பிரிவின் போது, ஒவ்வொரு வியாதியும் கொவிட் உடன் சம்பந்தப்பட்டதாக கருதப்பட்டதுடன், வியாதி நிலைமை தொடர்பான ஏனைய பிரதான அடையாளங்களை சுகாதாரத் துறை பணியாளர்கள் பார்க்கத் தவறினார்கள் அல்லது அலட்சியம் செய்தார்கள். அதாவது, தொற்றாத நோய்கள், முன்பே இருந்து வந்த சுகாதார நிலைமைகள் மற்றும் அவர்களுடைய ஒட்டுமொத்த ஆரோக்கியத்தின் மீது போ'ாக்கின்மை எடுத்து வரும் தாக்கம் போன்ற விடயங்களும் இதில் அடங்கும்.

## பரிந்துரைகள்

அரசு செய்ய வேண்டியவை:

- ☐ பின்வரும் விடயங்கள் தொடர்பாக சுகாதாரத் துறையினருக்கு கூருணர்வூட்டும் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்:

- ☐ நோயாளிகளை அவர்களுடைய முழுமையான வாழ்க்கை பின்னணியை வைத்து மதிப்பிடுதல் நோயாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருடனான தொடர்பாடல்களை விருத்தி செய்தல் இது நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோரின் அனுபவங்களை முனைப்பான விதத்திலும், அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதத்திலும் செவிமடுத்துக் கேட்பதனையும் இது உள்ளடக்குகிறது

- ☐ நிலைபேறான அபிவிருத்திக்கு அத்தியாவசியமாக இருந்து வரும் ஆரோக்கியமான குடித்தொகையினரை உருவாக்கும் பொருட்டு

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

முதலீடுகளை மேற்கொள்வதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்ற விடயத்தை சுகாதாரத் துறைக்கும், பொதுமக்களுக்கும் எடுத்து விளக்குதல்.

குறிப்பாக:
சுகாதாரப் பராமரிப்பு தொடர்பாக ஒரு மீள் எண்ணக் கருவை உருவாக்குவதற்கென அரசு மிக முக்கியமான ஒரு நகர்வை மேற்கொள்ளல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் ஆளணியினருக்கு பின்வருவன தொடர்பாக பயிற்சி அளித்தல்:

- ☐ அவர்கள் பொதுமக்களுக்கு பராமரிப்பை வழங்க வேண்டிய கடமையை கொண்டுள்ளார்கள் என்ற விடயத்தை அங்கீகரித்தல்
- ☐ ஒரு சேவையை வழங்குவதற்கென அரசினால் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதுடன், அது தொடர்பாக அவர்களை பொறுப்புக் கூற வைத்தல் மற்றும்
- ☐ நோயாளிகள் உரிமைகளை கொண்டுள்ளார்கள் என்ற விடயத்தை அங்கீகரித்தல் மற்றும் இது அனைவரும் அணுகக் கூடிய, தரமான சுகாதாரப் பராமரிப்புக்கான உரிமைகளையும் உள்ளடக்குகின்றது.

அரசு பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை பொறுப்பேற்றல்:

- ☐ சேவை மனப்பான்மையுடன் செயற்படுவதற்கும், மற்றவர்களின் உணர்வுகளை மதித்து செயற்படுவதற்கும், பொறுப்புக் கூறுவதற்கும் அனைத்து மட்டங்களையும் சேர்ந்த சுகாதாரப் பராமரிப்பு வழங்குனர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்
- ☐ தமக்கு உரிமைகள் இருந்து வருகின்றன என்ற உரிமை குறித்தும் இந்த உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறைகள் குறித்து அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பது குறித்தும் சமூகத்துக்கு மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குதல்.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல்:

- ☐ குறிப்பாக இந்தப் பயிற்சிகள், சுகாதாரச் சேவைகளை வழங்குபவர்கள், அவ்வாறு வழங்கப்படும் பராமரிப்பு தொடர்பாக நோயாளர்களின் கண்ணோட்டங்களை செவிமடுத்துக் கேட்பதை அவசியப்படுத்தல் வேண்டும்
- ☐ அவர்களுடைய நோயின் இயல்பு மற்றும் அவர்களுக்கு கிடைக்கும் சிகிச்சைத் தெரிவுகள், மருந்துகளின் பக்க விளைவுகள் மற்றும் நடைமுறைகள் என்பன குறித்து நோயாளர்களுக்கு தகவல்களை வழங்கி, தகவல் அறிந்த நிலையில் அவர்கள் வழங்கும் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளல்
- ☐ சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் அவர்கள் பராமரிப்பு வழங்குவதற்கான கடமையைக் கொண்டுள்ளார்கள் என்பது குறித்தும், நோயாளர்கள் சுகாதாரத்துக்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள் என்பது குறித்தும் அவர்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் அந்தப் பயிற்சியை மீள நெறிப்படுத்துதல்
- ☐ பொதுச் சுகாதாரத் துறையில் தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொள்ளல், அதனை அரசாங்கத்தின் பாரிய மேண்தகு அபிவிருத்தி உத்தியுடன் இணைத்தல்.

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

- ☐ வினைத்திறன்மிக்க தேவைகள் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும், வளங்களை பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்குமென பொதுச் சுகாதாரச் சேவைகளை உள்;ராட்சி, (மாகாண) மற்றும் தேசிய அரசாங்க கட்டமைப்புக்களுடன் இணைத்தல்.

- ☐ அவர்கள் எதிர்கொண்டு வரும் சவால்களை புரிந்து கொள்வதற்கும், இச்சேவைகளை விருத்தி செய்வதற்குமென சுகாதாரச் சேவை வழங்குனர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்

- ☐ அனைத்து மட்டங்களிலும் தற்போதைய சேவை வழங்குனர் மீது பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை குறைப்பதன் மூலம் சுகாதார பராமரிப்புத் துறைக்கு ஆதரவளிப்பதற்கென முதலீடு செய்தல் (மோசமான வேலை நிலைமைகள் மற்றும் சம்பளங்கள் என்பன மோசமாக இருந்து வருவதாகவும், ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்து வருவதாகவும் அவர்கள் முறைப்பாடு செய்கிறார்கள்)

இந்த அடிப்படை நகர்வை அமுல் செய்வதில் அரசின் தலையீடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் தேவைப்படுகின்றன:

- ☐ நோயாளர்களின் உரிமைக்கான சட்ட ரீதியான சட்டகத்தை பலப்படுத்துதல் அனைவரையும் உள்வாங்கும் ஒரு செயன்முறை, பொது நிர்வாக சுகாதாரத் துறை, சிவில் சமூகம் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் இணைந்து செயற்படுதல் என்பவற்றுக்கூடாக இதனை மேற்கொள்ளல்

- ☐ அனைவரையும் உள்வாங்கும் ஒரு செயன்முறைக்கு ஊடாக நோயாளர் உரிமை சாசனமொன்றை அபிவிருத்தி செய்து, உருவாக்கி, புதுப்பிக்கும் விடயத்தில் முதலீடு செய்தல் உரிய நேரத்தில் தரமான சுகாதாரச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை, தகவல் அறிந்த நிலையில் சம்மதத்தை தெரிவிப்பதற்கான வாய்ப்புக்கள், இரகசியத்தன்மை, அந்தரங்கம், பாரபட்சம் காட்டாமை என்பவற்றுக்கான உரிமைகள் மற்றும் பழிவாங்கல் குறித்த அச்சமின்றி முறைப்பாடுகளைச் செய்தல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் நோயாளிகளின் உரிமைகளை தெளிவாக எடுத்து விளக்கும்.

- ☐ பின்வரும் விடயங்களை அங்கீகரிக்கும் பொருட்டு சுகாதார பராமரிப்பு தொடர்பான புரிந்துணர்வை விரிவாக்குதல்:

  - ◊ சுகாதார பராமரிப்பு என்பது ஏனையவற்றுடன் மனநலம், பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம், தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியம், சுக நிலை மற்றும் தொழில் சுகாதாரம் என்பவற்றை உள்ளடக்குகிறது.

  - ◊ சுகாதாரப் பராமரிப்பு வதிவிட நோயாளிகளுக்கு வைத்தியசாலை பின்னணியிலும், கிளினிக்குகளிலும், சிகிச்சை நிலையங்களிலும் வழங்கப்படுகின்றது - இவை அனைத்தும் நோயாளர்கள் சாசனத்தில் உள்வாங்கப்படுதல் வேண்டும்.

  - ◊ வைத்தியசாலைகளுக்கு செல்லும் பொழுது அல்லது வைத்தியசாலைகளில் தங்கியிருக்கும் பொழுது நோயாளிகள் தமது குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோரின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள். இந்த விடயம் இதில் உள்வாங்கப்படுதல் வேண்டும்.

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

◊ தமது சமய மற்றும் கலாசார நம்பிக்கைகளுக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சை தமக்கு வழங்கப்பட வேண்டுமென வேண்டுகோள் எடுப்பதற்கான உரிமையை நோயாளிகள் கொண்டுள்ளார்கள். மேலும், அதே போல சிகிச்சையை மறுப்பதற்கான உரிமையையும் அவர்கள் கொண்டுள்ளார்கள்.

- ☐ சுகாதார பராமரிப்புத் துறையை நிர்வகித்து வரும் தற்போதய சட்டவாக்கத்தை மீளாய்வு செய்து, திருத்துதல் நோயாளர் உரிமைகள் தொடர்பாக குறிப்பாக, பொருளாதார சீராக்கல் திட்டங்கள் அமுல் செய்யப்படும் காலப் பிரிவுகளில் நோயாளர் உரிமைகள் தொடர்பான சர்வதேச தரநியமங்களுடன் இணைந்து செல்வதனை இது உறுதிப்படுத்துவது அவசியமாகும்.
- ☐ நோயாளர் உரிமைகள் மற்றும் மீறல்களுக்கான அபராதங்களை விதித்தல் என்பன தொடர்பான ஏற்பாடுகளை உள்வாங்கும் பொருட்டு தற்போதைய சட்டவாக்கத்தை திருத்துதல்.
- ☐ நோயாளர் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் குறித்து சுகாதாரத் துறை பொது நிர்வாக ஆளணியினர் மற்றும் சமூகங்கள் ஆகிய தரப்புக்களுக்கு தெளிவுபடுத்துதல்.
- ☐ பொறுப்புக் கூறுதல் மற்றும் இணங்கியொழுகுதல் என்பவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு பொறிமுறைகளை ஸ்தாபித்தல்.

## தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான நோயாளர்கள் மற்றும் சமூகம் ஆகிய தரப்புக்கள் கொண்டிருக்கும் உரிமைகள்

தொற்று நோயாளர்களை தனிமைப்படுத்தல் இடங்கள் மற்றும் தனிமைப்படுத்தல்

பெருந்தொற்று இடம்பெற்ற காலப் பகுதியின் போதும், தடுப்பூசிகள் கிடைக்கும் வரையிலும் தொற்று நோயாளர்களை தனிமைப்படுத்தி வைக்கும் இடங்கள், ஊரடங்குச் சட்டங்கள் மற்றும் தனிமைப்படுத்தல் என்பன பின்பற்றப்பட்டு வந்த உத்திகளாக இருந்து வந்தன. எவ்வாறிருப்பினும், பெருந்தோட்டங்களில் வரிசை (லைன்) அறைகளில் வாழ்ந்து வரும் மக்கள் மற்றும் நெரிசல் மிகுந்த நகரக் குடியிருப்புக்களில் நெருக்கமாக வாழ்ந்து வரும் மக்கள் ஆகியோரைப் பொருத்தவரையில் இது ஒரு சாத்தியமான உத்தியாக இருந்து வரவில்லை. மேலும், நாளாந்த கூலி வேலை செய்து வரும் தொழிலாளர்களை பொருத்தவரையில் அது அவர்களது வாழ்வாதாரங்கள் மீதும், உணவைப் பெற்றுக் கொள்ளும் அவர்களது இயலுமை மீதும் தாக்கத்தை ஏற்படுத்தி வந்தது.

கிராமிய சமூகங்களைச் சேர்ந்த ஒரு சில மக்கள் பிரிவினர் உணவுப் பங்கீடுகளை தாம் பெற்றுக் கொண்ட விடயத்தையும், அது தாம் உயிர் வாழ்வதற்கு உதவியது என்ற விடயத்தையும் ஏற்றுக் கொண்டு அதனைப் பாராட்டினார்கள். அதே வேளையில், இத்தகைய தலையீடுகள் அவ்வப்பொழுது மேற்கொள்ளப்பட்டவையாக இருந்து வந்ததுடன், பெருந்தொற்று நிலவிய காலம் நெடுகிலும் தொடர்ச்சியாக அது நிகழவில்லை என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

தனிமைப்படுத்தல் அனுபவங்கள் வேறுபட்டவையாக இருந்து வந்தன. ஒரு சிலர் குடும்பத்துடன் செலவிட்ட நேரத்தை அனுபவித்து. மகிழ்ந்ததுடன், மற்றும் சிலர் அது தாம் மன அழுத்தத்தை அனுபவித்து வந்த ஒரு காலப் பிரிவாக இருந்து வந்தது எனச் சொன்னார்கள். தாம் வீட்டு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், உணவைப்

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

பெற்றுக் கொள்வதில் சவால்களை எதிர்கொண்டதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டார்கள்.

### பரிந்துரைகள்

ஒரு பொதுச் சுகாதார அவசர நிலைமையின் போது அல்லது ஏனைய நெருக்கடிகளின் போது அரசு அசாதாரணமான வழிமுறைகளை அமுல் செய்யும் பொழுது, அது பின்வருவனவற்றை மேற்கொள்ளல் வேண்டும்:

- ☐ தேவையான அளவுக்கு அவற்றை மிகுந்த எச்சரிக்கையுடனும், நீதி நியாயமான விதத்திலும் அமுல் செய்தல்
- ☐ இந்த வழிமுறைகள் சமூகங்கள் மீது எடுத்து வரும் பின்விளைவுகளை வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து மதிப்பீடு செய்தல் வேண்டும். அது அச்சமூகங்கள் சுகாதார சேவைகள், வாழ்வாதாரங்கள், உள மற்றும் உடல் ஆரோக்கியம் என்பவற்றை அணுகுவதனையும் இது உள்ளடக்குதல் வேண்டும்
- ☐ பல்வேறு ஊடக வடிவங்களுக்கூடாக பொதுமக்களுடன் அவர்கள் புரிந்து கொள்ளும் மொழிகளில் அடிக்கடி தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டும்.

### தகவல், சம்மதம், கண்ணியம், ஒப்புரவு, இரகசியத்தன்மை தொடர்பான உத்தரவாதம்

தமது நோய் நிலை, சிகிச்சைகள் மற்றும் விதித்துரைக்கப்பட்டிருக்கும் மருந்துகள், சாத்தியமான பக்கவிளைவுகள் மற்றும் சுகமடைவது தொடர்பான எதிர்பார்ப்புக்கள் என்பன குறித்து தகவல்கள் கிடைக்க வேண்டுமென நோயாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். வைத்தியர்களாக தொழில் செய்து வருபவர்களும் கூட தொடக்கத்தில் கொவிட் தொற்று குறித்து முழுமையான ஒரு புரிந்துணர்வை கொண்டிருக்கவில்லை. பெருந்தொற்று வளர்ச்சி கண்டு வந்த சந்தர்ப்பத்திலேயே அவர்கள் மேலும் தகவல்களை பெற்றுக் கொண்டார்கள். எவ்வாறிருப்பினும், பெருந்தொற்று காலப் பிரிவின் போது மருத்துவர்களாக தொழில் செய்பவர்கள் தமது விழிப்புணர்வு மற்றும் புரிந்துணர்வு என்பவற்றை அதிகரித்துக் கொண்ட சந்தர்ப்பத்தில் மக்களுக்கும் அத்தகைய தகவல்கள் தொடர்பான இற்றைப்படுத்தல்களை வழங்க வேண்டிய கடப்பாடு இருந்து வந்தது.

கரிசனைக்குரிய துறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருந்தன: தமக்கு வழங்கப்பட்ட மருந்துகள் அல்லது அவற்றின் பக்கவிளைவுகள் குறித்து மக்கள் சிறிதளவு விளக்கத்தை மட்டுமே கொண்டிருந்தார்கள். குறிப்பாக, கொவிட் தடுப்பூசிகளை பொருத்தவரையில் இந்த நிலைமையே நிலவி வந்தது.

செலவு கூடிய பல்வேறு பரிசோதனைகளை நடத்த வேண்டுமென மருத்துவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், இந்தப் பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டுமென அவர்கள் கேட்பது ஏன் மற்றும் அதன் மூலம் அவர்கள் கண்டுபிடிப்பதற்கு அல்லது முடிவு செய்வதற்கு எதிர்ப்பார்ப்பது என்ன என்பது குறித்து அவர்கள் மக்களுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மருத்துவர்கள் மருந்துகளை வாங்குவதற்காக குறிப்பிட்ட ஒரு சில பாமசிகளுக்கு நோயாளிகளை நெறிப்படுத்தியதுடன், அத்தகைய பாமசிகள் தொடர்பாக அந்த மருத்துவர்கள் சுயநல அக்கறை கொண்டிருக்கிறார்கள் என நோயாளிகள் அச்சந்தர்ப்பத்தில் நம்பினார்கள். மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளுக்கிடையில் தொடர்பாடல் இல்லாதிருந்த நிலை சிகிச்சை தொடர்பாக மக்கள் நம்பிக்கை இழப்பதற்கு பங்களிப்புச் செய்திருந்தது.

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

மிக மோசமான பக்கவிளைவுகள் குறித்து மக்கள் முறைப்பாடுகளை முன்வைத்த பொழுது, இந்த முறைப்பாடுகள் வெறுமனே கற்பனையை அடிப்படையாகக் கொண்டவை எனக் கருதி நிராகரிக்கப்பட்டன. பரிசோதனைகளை நடத்துவதற்கும், அவர்கள் உண்மையில் பக்கவிளைவுகளை அனுபவித்தார்களா என்பதை கண்டறிந்து கொள்வதற்கும் அல்லது அந்த பக்கவிளைவுகள் தற்செயலாக இருந்து வந்தனவா என்பதனை கண்டறிவதற்கும் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நோயாளர்களுக்கு எத்தகைய உத்தரவாதங்களும் வழங்கப்படவில்லை அது அவர்களுக்கு மன அழுத்தத்தை எடுத்து வந்ததுடன், சிகிச்சையளிக்கப்படாத நோய்க் குறிகளையும் ஏற்படுத்தியது.

சுய விருப்பில் ஒன்றை ஏற்றுக் கொள்ளல் மற்றும் பலவந்தமாக இணங்கியொழுக வைத்தல் என்பவற்றுக்கிடையிலான கோடு மிகவும் மங்கலானதாகும். பல வழிகளில் பலவந்தம் பிரயோகிக்கப்பட்டது.

தமக்கும், தமது பிள்ளைகளும் கூட பலவந்தமாக தடுப்பூசி ஏற்றப்பட்டதாக தகவல் வழங்கிய ஒரு சிலர் முறைப்பாடு செய்தார்கள். இது தார்மீக ரீதியானதா மற்றும் சட்ட ரீதியானதா என அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், அவர்கள் தமது கரிசனைகளை எழுப்ப முடியாதவர்களாக அல்லது பதில்களை அல்லது உத்தரவாதங்களை பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருந்து வந்தார்கள்.

பெருந்தொற்று காலப் பிரிவின் போது தடுப்பூசி தொடர்பாக எதிர்மறையான எண்ணங்கள் அபிவிருத்தியடைந்து, தொடர்ந்து வளர்ச்சியடைந்த பொழுது குறிப்பாக, ஒரு சில வணிகச் சின்னங்களைக் கொண்ட தடுப்பூசி வகைகள் தொடர்பாக பொதுச் சுகாதார அதிகாரிகள் உத்தரவாதங்களை வழங்குவதற்கு எத்தகைய முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

ஊடகங்களுக்கூடாக நோயாளிகள் தவறான தகவல்களை பெற்றுக் கொண்டதுடன், அதிகாரிகள் ஊடாக மாற்றுச் சிகிச்சைகள் மற்றும் நோய் தொற்றின் பரவல் என்பன தொடர்பாக தகவல்களை பெற்றுக் கொண்டார்கள். கொவிட் தொற்று காரணமாக மரணமடைந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதன் மூலம் மண் மற்றும் நிலத்தடி நீர் மாசடையக் கூடிய சாத்தியபாடுகள் இருந்து வருகின்றன என்ற கோட்பாட்டை ஒரு சில அதிகாரிகள் தொடர்ந்து நம்பி வந்தார்கள். இது குளறுபடி நிலையையும், அதிகரித்தளவிலான பதற்ற நிலைமைகளையும் உருவாக்கியது. கொவிட் சடலங்கள் எரியூட்டப்பட்ட விடயம் முஸ்லிம் சமூகத்தின் மீது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வந்தது. முஸ்லிம்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டும் வரலாற்றின் பின்புலத்தில், தாம் வேண்டுமென்றே பலியாக்கப்பட்டிருப்பதாக அச்சமூகம் கருதியது. வேறு எந்தவொரு நாடும் இந்தக் கடும் அணுகுமுறையை பின்பற்றவில்லை என்பதற்கும், இந்தத் தடுப்பு முறையை உலக சுகாதார தாபனம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்கும் தெளிவான சான்றுகள் இருந்து வந்தன. இஸ்லாமிய ஒத்துழைப்புக்கான அமைப்பு (முஐஊ) அரசாங்கததின் மீது பிரயோகித்த அழுத்தத்தின் பின்னர் இந்தக் கொள்கை கைவிடப்பட்டது. ஆனால், அர்த்தபூர்வமான மன்னிப்புக்களோ அல்லது இழப்பீடுகளோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்தக் கொள்கையின் தாக்கமும், “நிபுணர்களுக்கு” இடையிலான மாறுபட்ட அபிப்பிராயங்களும் பொது மக்களின் நம்பிக்கையை போஷித்து வளர்ப்பதற்கு எந்த விதத்திலும் பங்களிப்புச் செய்யவில்லை. அத்தகைய நெருக்கடிகளின் போது பொது மக்களின் நம்பிக்கையை பெற்று பராமரித்து வருவது அத்தியாவசியமானதாக இருந்து வந்த போதிலும், அச்சந்தர்ப்பத்தில் அது இடம்பெறவில்லை.

கொவிட் தொற்றுடன் சம்பந்தப்பட்ட அனுபவங்களுக்கு அப்பால் பொதுவாக தம்மீது மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் குறித்தும், தமக்கு விதித்துரைக்கப்படும் மருந்துகள் குறித்தும், மருந்துகளின் பக்கவிளைவுகள் குறித்தும், தமது சுகாதார நிலவரம் குறித்தும் தமக்குப் போதியளவு தகவல்கள் கிடைப்பதில்லை என

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

நோயாளிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர். தமக்கு வழங்கப்படும் சிகிச்சையை வெறுமனே பெற்றுக் கொள்பவர்களாக மட்டும் இருந்து வர வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கப்பட்டார்கள்.

பொது விசாரணைகளில் பங்கேற்றவர்கள் வைத்தியசாலையை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய தேவையையும், சமூக மட்டத்தில் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து பரவலான விழிப்புணர்வைத் தூ ண்டுவதற்கு பொறிமுறைகளை உருவாக்க வேண்டிய தேவை குறித்தும் வலியுறுத்தியிருந்தார்கள்.

நோயாளர்கள் என்பது தனியொரு, ஒரே இயல்பிலான கட்டமைப்பு அல்ல. அவர்களுடைய பாலினம், வயது, வர்க்கம், கல்வி, தொழில், இனம், வசிப்பிடம் ஆகிய அனைத்தும் அவர்களை பற்றிய கருத்தை உருவாக்குவதிலும், சுகாதாரத் துறை அவர்களுக்கு சிகிச்சை வழங்கும் விதத்திலும் ஒரு தாக்கத்தை கொண்டிருக்கிறது. மேலும், அது அவர்கள் சுகாதாரத்தை பெற்றுக் கொள்ளும் நிலையின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## பரிந்துரைகள்

- ☐ பொதுச் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் குறித்து தொடர்பாடல்களை மேற்கொள்ளும் விடயத்தில் தொடர்ச்சியாக முதலீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

- ☐ நோயாளர்கள் தமது வாழ்வின் போதும், மரணத்தின் போதும் கண்ணியமான விதத்தில் நடத்தப்படுதல் வேண்டும். தவறுகளை ஏற்றுக் கொள்ளும் நிலை இருந்து வர வேண்டியிருப்பதுடன், அத்தகைய தவறுகள் மீண்டும் ஒரு போதும் இடம்பெற மாட்டாது. என்பதனை உறுதிப்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

- ☐ கிராமிய மற்றும் சமூக மட்டத்தில் நோயாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கு சமூக மட்டத்திலான சுகாதார நிலையங்கள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் இல்லாதிருக்கும் விடயம் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

## அந்தரங்கம் குறித்த நோயாளர்களின் உரிமைக்கும், தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான பொது மக்களின் தேவைக்குமிடையில் சமநிலையை பராமரித்தல்

பொது மக்களுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்கள்

பொதுமக்களுக்கான பொதுமைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்கள், அவற்றை பின்பற்றுவதற்கான அவர்களது ஆற்றல்களையும் கவனத்தில் எடுக்க வேண்டுமென தகவல் வழங்கியவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

முகக்கவசங்களை கட்டாயமாக அணிந்திருக்க வேண்டிய நிலை சூடு காரணமாக தமக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதாக பலர் முறைப்பாடு செய்திருந்தார்கள். குறிப்பாக, பிள்ளைகள் தொடர்பாக இந்த நிலைமை காணப்பட்டதுடன், முகக்கவசங்களின் தட்டுப்பாடு மற்றும் செலவு என்பன குறித்தும் அவர்கள் முறைப்பாடு செய்திருந்தார்கள்.

வேலை செய்யும் பொழுது முகக்கவசங்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் அணிதல் என்பன தொடர்பாக தாம் விசேடமான சவால்களை எதிர்கொண்டதாக பெருந்தோட்டத் தொழிலாளர்களும், கடற்றொழில் சமூகத்தினரும் சொன்னார்கள்.

முகக்கவசங்களை அணிதல், தனிமைப்படுத்தல் இடங்கள் மற்றும் தனிமைப்படுத்தல் என்பவற்றுக்கான தேவை குறித்து நேர்காணலுக்குட்படுத்தப்பட்டவர்கள்

# கோவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

மாற்றுக் கருத்துக்களை கொண்டிருக்கவில்லை. ஆனால், பொது மக்களுக்கு இந்த அசாதாரணமான கால கட்டங்களில் வழிகாட்டுவதற்கென தொடர்ச்சியான பகிரங்க தொடர்பாடல்களும், தொடர்புகளும் இருந்து வர வேண்டுமென அவர்கள் கருதினார்கள்.

முக மறைப்புக்கள் தங்குதடையின்றி கிடைப்பதனையும், குறைந்த விலையில் கிடைப்பதனையும் உறுதிப்படுத்துவதற்கு வழிமுறைகள் அவசியமாக இருந்து வருகின்றன என அவர்கள் கருத்துக்களை தெரிவித்திருந்தார்கள்.

## பரிந்துரைகள்

- ☐ பொது மக்கள் மீது தணிக்கப்பட்ட அவசர கால வழிமுறைகள், அவற்றின் தாக்கத்தை எதிர்கொள்ளும் பொருட்டு அவசர கால வழிமுறைகள் மூலம் ஈடு செய்யப்படுதல் வேண்டும். தனிமைப்படுத்தலில் இருப்பவர்களுக்கு உணவு வழங்குதல், கடன் தவணைக் கட்டணங்கள் மற்றும் அடமானத் தொகைகள் என்பவற்றின் கொடுப்பனவுகளை நிறுத்தி வைத்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகள் என்பவற்றை வழங்குவதற்கான வழிமுறைகள் என்பன நிவாரணம் வழங்கும் வழிமுறைகளாகும்.

- ☐ வினைத்திறன்மிக்க பொதுச் சுகாதார சேவை ஒன்றை வழங்கும் பொருட்டு செயன்முறை நெடுகிலும் பொது மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொள்வதும், பராமரித்து வருவதும் அத்தியாவசியமானதாகும்.

- ☐ இதனை செய்யும் பொருட்டு அதிகாரிகள் பொது மக்களை அணுகி, அவர்களுடன் தொடர்பாடலை மேற்கொண்டு, செய்திகளை அவர்களுக்கு வழங்கி, அவர்களுடன் இணைந்து செயற்பட்டு, அவர்களுக்கு கல்வியூட்டுதல் வேண்டும். அது தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும்.

- ☐ தடுப்பூசிகளின் பாதுகாப்பு, தடுப்பூசிகளை ஏற்றாவிட்டால் தமக்கும், தனது குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் ஏற்படக் கூடிய தாக்கங்கள் மற்றும் பின்விளைவுகள் என்பன குறித்து பொதுமக்களுக்கு சிறந்த விதத்தில் கல்வியூட்டல் வேண்டும்.

- ☐ தனிநபர் உரிமைகளை பரவலான பொதுச் சுகாதார தர நியமங்களின் வசதிகளுடனும், பரந்த சமூகத்தின் பாதுகாப்புடனும் சமநிலையில் வைத்திருப்பதற்கென பொது மக்களுக்கு தொடர்பாடல் செய்திகள் அனுப்பி வைக்கப்படுவது அவசியமாகும்.

- ☐ சுகாதார தொழில்வாண்மையாளர்கள் மக்கள் மீது ஒப்புரவைக் காட்டி, அவர்களுடைய நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு பொறுமையுடன் நடந்து கொள்ளல் வேண்டும்.

- ☐ பொதுச் சுகாதாரம் தொடர்பான விடயங்கள் குறித்த தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கென தொடர்ச்சியாக முதலீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

- ☐ இணங்கியொழுகும் முறைமைகளை அமுல் செய்யும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவருடைய தொழில் பின்புலங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

- ☐ இலங்கை மக்கள் போலி மருந்துகள் மற்றும் காழ்ப்புணர்ச்சி என்பவற்றின் அடிப்படையில் தவறான தகவல்களை பெற்றுக் கொண்டதுடன், அத்தகைய தவறான தகவல்களுக்கான மூலங்கள் உயர் அரசாங்க அதிகாரிகளாக இருந்து வந்த சந்தர்ப்பங்களிலும் கூட எவரும் அவற்றுக்கு பொறுப்புக் கூற வைக்கப்படவில்லை.

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

- ☐ நோயாளிகள் தமது வாழ்விலும், மரணத்திலும் கண்ணியமான விதத்தில் நடத்தப்படுதல் :வேண்டும். இடம்பெற்ற தவறுகளை ஏற்றுக் கொள்ள வேண்டியிருப்பதுடன், அவை மீண்டும் ஒரு போதும் நிகழாதிருப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

- ☐ கிராமிய மற்றும் சமூக மட்டத்தில் நோயாளிகளுக்கு ஆதரவளிப்பதற்கென போதியளவிலான சமூக அடிப்படையிலான சுகாதார நிலையங்கள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் இல்லாத விடயத்தை கவனத்தில் எடுத்தல்.

## தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் தனிமைப்படுத்தல் என்பவற்றின் பின்புலத்தில் நோயாளர்களின் உரிமைகள்

தனிமைப்படுத்தல் என்பது நாளாந்த கூலி வேலை செய்து வாழ்பவர்கள் தமது வருமானம் மற்றும் வாழ்வாதாரங்கள் என்பவற்றை இழந்துள்ளார்கள் என்பதாகும். எளிதில் ஊறுபடத்தக்க சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கான திட்டம் எதுவும் இல்லாத நிலையில் கட்டாயமாக தனிமைப்படுத்தலை மேற்கொண்டதும், ஊரடங்கு உத்தரவுகளை அமுல் செய்ததும் சிரமங்களை எடுத்து வந்தன.

பெருந்தொற்று மீது முற்று முழுதாக கவனம் செலுத்திய நிலை ஏனைய நோய்களை கொண்டிருக்கும் நோயாளர்கள் - குறிப்பாக நாட்பட்ட மற்றும் மோசமான தொற்றா நோய்களை கொண்டிருக்கும் நோயாளர்கள் - சுகாதாரப் பராமரிப்பை அணுக முடியாத ஒரு நிலையை எடுத்து வந்தது.

## பரிந்துரைகள்

- ☐ பொதுச் சுகாதார முறைமைகள் நிலைத்து நிற்கக் கூடிய சுகாதாரப் பராமரிப்பை வழங்கும் பொருட்டு பதிவுகளை பராமரித்தல் மற்றும் நோயாளர்களின் கடந்த கால நிலைமைகளை கண்டறிதல் என்பவற்றுக்கென முதலீடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- ☐ தமக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் தொடர்பான பொருத்தமான பதிவுகளை தாம் கொண்டிருக்கவில்லை என்றும், பரிசோதனைகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது என்றும் நோயாளர்கள் குறிப்பிட்டார்கள்.

- ☐ அரசு பொறிமுறைகளை ஸ்தாபித்து பராமரித்து வருதல் வேண்டும் சமூக மட்டத்தில் நோயற்ற நிலை மற்றும் சுகாதாரப் பராமரிப்பு என்பவற்றை பராமரித்து வருவதற்கென ஸ்தாபிக்கப்பட வேண்டிய சேவைகளின் வகைகள் மற்றும் சேவை வலையமைப்புக்கள் என்பன தொடர்பான தகவல்களை வழங்குவதற்கென சிவில் சமூகம் மற்றும் சமூக வலையமைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும்.

## கட்டுப்படியாகக் கூடிய மற்றும் அணுகக் கூடிய சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நோயாளிகளின் உரிமைகள்

தமக்கு விதித்துரைக்கப்பட்ட மருந்துகள் அரசாங்க பாமசிகளில் கிடைக்கவில்லை என்றும், அவற்றை தனியார் பாமசிகளிலிருந்து கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது என்றும் - பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மருத்துவர்களால் குறிப்பிடப்பட்ட பாமசிகளிலிருந்து - கொள்வனவு செய்ய வேண்டி தகவல் தந்தவர்களில் பலர் குறிப்பிட்டிருந்தார்கள். இது இத்தகைய கொள்வனவுகள்

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

தொடர்பாக மருத்துவர்கள் தரகுத் தொகைகளை பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்பது குறித்து சந்தேகங்கள் தோன்றுவதற்கு வழிகோலியது.

பரீட்சிப்புக்களுக்கென நோயாளர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு பயணம் செல்ல வேண்டியிருப்பது, பரிசோதனைகளை செய்து கொள்வதறகும், மருந்துகளை கொள்வனவு செய்வதற்கும் பாமசிகளுக்கு செல்ல வேண்டியிருப்பது போன்ற விடயங்களையும் அணுகக் கூடிய சுகாதாரப் பராமரிப்பு கவனத்தில் எடுக்க வேண்டும்.

நாளாந்தம் கூலி வேலை செய்யும் தொழிலாளர்களை பொருத்தவரையில் தமது வேலை நேரத்தின் போது சிகிச்சை நிலையங்களுக்கு வருவது சவால்மிக்க ஒரு காரியமாகும். ஏனெனில், அப்படி வரும் பொழுது அவர்கள் தமது கூலிகளை இழக்க வேண்டி நேரிடுகிறது.

## பரிந்துரைகள்

- ☐ தற்போது இருந்து வரும் முறைமைகளை மீளாய்வு செய்தல் மற்றும் நோயாளர்கள் சேவைகளை அணுகும் நிலையை விருத்தி செய்யும் பொருட்டு டிஜிட்டல் மற்றும் மொபைல் செயலிகளைப் பயன்படுத்துதல்.

- ☐ அவ்வாறு செய்யும் பொழுது, அனைவரும் டிஜிட்டல் சேவைகள் குறித்த அறிவு மற்றும் அவற்றை அணுகும் விதம் குறித்து அறிவு என்பவற்றை கொண்டிருக்கவில்லை என்பதனை அங்கீகரித்தல். எனவே, இதற்கு பல்வேறு செயன்முறைகள் தேவைப்படுகின்றன.

## பின்னோக்கிய விதத்தில் பாராட்டுக்களை தெரிவித்தல்

அரசாங்கம் தடுப்பூசி செயன்முறையை விருத்தி செய்த விதம் குறித்து மக்கள் தமது பாராட்டுக்களை தெரிவித்திருந்தார்கள். உதாரணமாக, தடுப்பூசி செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட பொழுது, மக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றும் பொருட்டு அரசாங்கம் பூங்காக்கள் மற்றும் பாடசாலைகள் போன்ற திறந்த வெளி இடங்களை ஏற்பாடு செய்திருந்தது. தடுப்பூசிகள் எந்த இடத்தில் வழங்கப்படும் என்பது குறித்து சிறந்த விதத்தில் தொடர்பாடல்களை மேற்கொண்டது. எனவே, சுகாதார சேவைகள் ஏற்கனவே மக்கள் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொண்டிருப்பதுடன், அதிலிருந்து தொடர்ந்தும் பயன்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## வாழ்வு மற்றும் மரணம் என்பவற்றின் போது கண்ணியத்துடன் நடத்தப்படுவதற்கான உரிமை: மரணித்தவர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டிய நோயாளர் உரிமைகள் தொடர்பான அம்சங்கள்

மரணித்த நபர்கள் அவர்களுடைய விருப்பங்கள், அவர்களுடைய சமய மற்றும் கலாசார உரிமைகள் என்பவற்றின் பிரகாரம் கண்ணியமாக நடத்தப்பட வேண்டிய உரிமையை கொண்டுள்ளார்கள்.

பெருந்தொற்றின் போது மரணமடைந்தவர்கள் அனைத்து சடலங்களையும் - அவர்கள் கொவிட் தொற்றை கொண்டிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி - பலவந்தமாக எரியூட்டுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்திய ஒரு தீர்மானமாக இருந்து வந்தது. மிகவும் மோசமானதாகும். அரசாங்கம் இந்த விடயத்தை வலியுறுத்திக் கூறியவுடன், மண் மாசடைதல் மற்றும் நிலத்தடி நீர் மூலாதாரங்கள் மாசடைதல் என்பவற்றுக்கூடாக கொவிட் தொற்று மேலும் பரவுவதை இதன் மூலம் தாம் தடுத்து வருவதாக அவர்கள்

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

வலியுறுத்திச் சொன்னார்கள். அத்தகைய மாசடைதல் இடம்பெற மாட்டாது என தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் எடுத்துக் கூறியதற்கு மத்தியிலும் கூட, அவர்கள் அவ்வாறு செய்தார்கள். முஸ்லிம் சமூகம் இதனை தம் மீதும், தமது சமய உணர்வுகள் மீதும் நிகழ்த்தப்பட்ட ஒரு நேரடித் தாக்குதலாக நோக்கியது.

பொது மக்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது, தமது சமூகத்தின் அனுபவங்களை தகவல் தந்தவர்கள் பலர் பகிர்ந்து கொண்டார்கள். நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள், தமது குடும்ப உறுப்பினர்கள் தொடர்பான இறுதிச் சடங்குகளை மேற்கொள்வதிலிருந்தும் தடுக்கப்பட்டார்கள் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தை பொருத்தவரையில் இந்த நிலைமை காணப்பட்டது. அவர்களுடைய சடலங்களை அடக்கம் செய்யும் விதத்தில் கொள்கைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். சடலங்கள் அவர்களுடைய கிராமங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட தொலைதூர இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இது செலவு கூடியதாக இருந்ததுடன், சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் பெரும் மன அழுத்தத்தையும் எடுத்து வந்தன. கொவிட் தொற்றில் பாதிக்கப்பட்டிருந்தவர்களின் சடலங்களையும் அடக்கம் செய்வது கூட சமூகத்தின் மீது அல்லது சுற்றாடலின் மீது எத்தகைய தாக்கத்தையும் எடுத்து வர மாட்டாது என நிபுணர்கள் ஆலோசனை வழங்கியிருந்த நிலைமையிலும் இது மேற்கொள்ளப்பட்டது.

## நோயாளர் உரிமைகளின் அத்தியாவசியமான அங்கங்களாக உள்வாங்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து மக்கள் என்ன கருதுகிறார்கள்?

சுதந்திரமாக முன்வைக்கப்பட்ட கேள்விகளின் போது நோயாளர்களின் உரிமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டுமென மக்கள் ஆணையாளர்களிடம் தெரிவித்தார்கள்:

- ☐ உரிய நேரத்தில், பாரபட்சமற்ற விதத்தில் சுகாதாரப் பராமரிப்பை பெற்றுக் கொள்வதற்கான உரிமை
- ☐ இலவச மருந்துகளையும் உள்ளடக்கிய விதத்தில் மருந்துகளை உட்கொள்வதற்கு போதிய வசதிகள்
- ☐ உடல் இயலாமைகளை கொண்டிருக்கும் ஆட்களுக்கு விசேட ஆதரவை வழங்குதல் மற்றும் பிரதேச பரிசோதனைகள் சிகிச்சைக்கான நோயாளர்களின் அம்சங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

நோயாளர்களின் உரிமைகள் தொடர்பான சாசனமொன்றை உருவாக்கும் பொழுது இலங்கை கவனத்தில் எடுக்க வேண்டிய முதன்மையான கூறுகளின் சாராம்சம்

நோயாளர்களின் உரிமைகளுக்கான சட்ட ரீதியான சட்டகத்தை பலப்படுத்துதல்

திருத்தப்பட்ட சட்டவாக்கத்தின் குறிக்கோள் பின்வரும் விதத்தில் இருந்து வருதல் வேண்டும்:

- ☐ பின்வரும் விடயங்களை திட்டவட்டமான விதத்தில் எடுத்து விளக்கும் நோயாளர்களின் உரிமைகள் தொடர்பான சாசனமொன்றை அபிவிருத்தி செய்து, சட்டமாக்குதல்:

ஒரு நோயாளி என்பவர் யார்

- ☐ நோயாளர்களின் உரிமைகளை எடுத்து விளக்குதல் - இது தரமான சுகாதாரப் பராமரிப்பு, தகவல்களை அறிந்த நிலையில் சம்மதத்தை தெரிவித்தல், இரகசியத்தன்மை, அந்தரங்கம், பாரபட்சம் காட்டாதிருத்தல் என்பவற்றுக்கான உரிமையையும், பழிவாங்கல் குறித்த அச்சமின்றி முறைப்பாடு

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

செய்வதற்கான உரிமையையும் உள்ளடக்குதல் வேண்டும்.

- ☐ சுகாதாரப் பராமரிப்பை நிர்வகித்து வரும் தற்போதைய சட்டவாக்கத்தை மீளாய்வு செய்து, திருத்துவதற்கான வழிமுறைகள் குறிப்பாக பொருளாதார சீராக்கம் இடம்பெறும் கால கட்டங்களின் போது நோயாளர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச தர நியமங்களுடன் பொருந்திச் செல்வதனை உறுதிப்படுத்துவதற்கு இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

- ☐ நோயாளர்களின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளை உள்வாங்குவதற்கும், மீறல்களுக்கென அபராதங்களை விதிப்பதற்குமென தற்போதைய சுகாதாரப் பராமரிப்பு சட்டவாக்கத்தை திருத்துவதற்கான வழிமுறைகள்.

நோயாளர் கல்வி, விழிப்புணர்வு மற்றும் பரப்புரை

- ☐ தமது உரிமைகள், கிடைக்கும் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள், சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடி நிலவும் கால கட்டங்களின் போது சுகாதாரப் பராமரிப்பு முறையை பயன்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பான தமது உரிமைகள் குறித்து நோயாளர்களுக்கு கல்வியூட்டுவதற்கென நாடாளவிய ரீதியிலான பிரச்சார இயக்கங்களை துவக்கி வைத்தல்.

- ☐ சம்மதத்தை பெற்று கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் மனக்குறைகளை வெளிப்படுத்துவது எப்படி என்ற விடயம்

- ☐ அறிவைப் பகிர்ந்தளிப்பதற்கும், வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கும் சமூக சுகாதார அமைப்புக்களுடன் கூட்டாக இணைந்து செயலமர்வுகளையும் தகவல் அமர்வுகளையும் ஏற்பாடு செய்தல்.

- ☐ தமது உரிமைகளை வலியுறுத்திக் கூறுவதற்கும், பொருளாதார அழுத்தங்களிலிருந்து தோன்றும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கு ஆதரவு வழங்குவதற்குமென தனிநபர்களுக்கு வலுவூட்டும் பொருட்டு நோயாளர் பரப்புரை குழுக்களை ஸ்தாபித்தல்.

இப்பிரச்சார இயக்கங்களுக்கென சமூக ஊடகங்கள் மற்றும் உள்;ராட்சி வலையமைப்புக்கள் என்பவற்றை பயன்படுத்துதல்

மனக்குறைகளை கையாளும் பொறிமுறைகளை ஸ்தாபித்தல்

- ☐ சுகாதாரப் பராமரிப்பு வழங்கப்பட்டு வரும் இடங்களில் அனைவரும் அணுகக் கூடிய மற்றும் செயல்திறன்மிக்க மனக்குறைகளை முன்வைக்கும் பொறிமுறைகளை உருவாக்குதல். உரிமை மீறல்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு அல்லது பழிவாங்கல் குறித்த அச்சமின்றி பராமரிப்பு தொடர்பான தமது அதிருப்தியை வெளியிடுவதற்கு நோயாளர்களுக்கு வாய்ப்பளிப்பதற்கென இவை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

- ☐ முறைப்பாடுகள் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்துவதற்கும், நோயாளிகளின் உரிமைகள் தொடர்பாக பரப்புரைகளை மேற்கொள்வதற்கும் ஆஸ்பத்திரிகளில் சுயாதீனமான நோயாளர் ஒம்புட்ஸ்மன் செயன்முறையை ஊக்குவித்தல்

- ☐ நோயாளர்களின் உரிமைகளுக்கென பரப்புரைகளை மேற்கொள்ளும் அமைப்புக்களை ஸ்தாபித்தல்

- ☐ நோயாளர்கள் தமது உரிமைகளை புரிந்து கொள்வதற்கும், அவற்றைப் பிரயோகிப்பதற்கும் அவர்களுக்கு ஆதரவளிக்கக் கூடிய சுயாதீனமான நோயாளர் பரப்புரை அமைப்புக்களை

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

உருவாக்குதல்.

- முறைப்பாடுகளை கவனத்தில் எடுப்பதற்கும், பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கும் என சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்களுக்குள் ஓம்புட்ஸ்மன் சேவைகள் ஸ்தாபிக்கப்படுவதனை மேம்படுத்துதல்.

சுகாதாரப் பராமரிப்பு வழங்குனர்களை பயிற்றுவித்தல்

- நோயாளர் உரிமைகள், தார்மீக ரீதியில் முடிவுகளை எடுத்தல், தொடர்பாடல் திறன்கள் மற்றும் குறிப்பாக பொருளாதார நெருக்கடிகள் இடம்பெற்று வரும் சந்தர்ப்பங்களில் கருணையுடன் கூடிய விதத்தில் தொடர்பாடல்களை மேற்கொள்வதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் குறித்து சுகாதாரப் பராமரிப்பு தொழில்வாண்மையாளர்களுக்கென கட்டாய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல்.

- ஒப்புரவை பேரீத்து வளர்ப்பதற்கும், நோயாளியின் தன்னாதிக்கத்துக்கு மதிப்பளிப்பதற்குமென மருத்துவக் கல்வியில் நோயாளரை மையமாகக் கொண்ட அணுகுமுறையை ஊக்குவித்தல்.

- நோயாளர்களுடன் கண்ணியமான விதத்தில் தொடர்புகளை பராமரித்து வரும் விடயத்தின் மீது கவனம் செலுத்தும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தொழில்வாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாக சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்களுக்குள் பொறுப்புக் கூறும் கலாசாரமொன்றை பேரீத்து வளர்த்தல்.

சுகாதார பராமரிப்பை ஏற்றத்தாழ்வற்ற விதத்தல் அணுகக் கூடிய நிலை

- விளிம்பு நிலை சமூகங்களையும் உள்ளடக்கிய விதத்தில் குடித்தொகையின் அனைவரும் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை ஏற்றத்தாழ்வற்ற விதத்தில் அணுகுவதை உறுதிப்படுத்தல்.

- கட்டுப்படியாகக் கூடிய நிலை, தமது சொந்தச் செலவுகளை குறைத்தல் மற்றும் அனைவருக்கும் சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை வழங்குதல் என்பவற்றை கவனத்தில் எடுப்பதற்கென கொள்கைகளை அபிவிருத்தி செய்தல்.

- குறிப்பாக, மிகவும் பலவீனமான மற்றும் விளிம்பு நிலை குடித்தொகையினருக்கு அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவதற்கென முன்னுரிமை நிதிப்படுத்தலை மேற்கொள்ளல். பொருளாதார சீராக்கங்கள் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் அதிகரித்தளவிலான ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தாதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

- மானியப்படுத்தப்பட்ட சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள் அல்லது குறை வருமான குடித்தொகையினருக்கு இலவசமாக சிகிச்சை வழங்குதல் போன்ற பாதுகாப்பு வலைகளை அமுல் செய்தல்☐ செலவைக் குறைக்கும் வழிமுறைகள் நோயாளர் பராமரிப்பின் மீது எடுத்து வரும் தாக்கத்தை தணிப்பதற்கென இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

கண்காணிப்பு மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறைகள்

- நோயாளர்களின் உரிமை மீறல்களை அறிக்கையிடுவதற்கு ஒரு தேசிய பதிவேட்டை உருவாக்குதல் மற்றும் நோயாளர் உரிமைகள் தொடர்பான தர நியமங்களுக்கு இணைங்கியொழுகுவதனை கண்காணிப்பதற்கென ஒரு முறைமையை உருவாக்குதல்.

- நோயாளர் உரிமைகள் தொடர்பான தர நியமங்களுக்கு இணங்கியொழுகுவதனையும், அவர்கள் குறிப்பாக கட்டமைப்பு ரீதியான சீராக்கல்

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

கொள்கைகள் அமுல் செய்யப்படும் காலப் பிரிவின் போது சுகாதாரப் பராமரிப்பை அணுகும் நிலையை மதிப்பிடுவதற்கும் வலுவான கண்காணிப்பு முறையொன்றை அமுல் செய்தல்.

- ☐ ஸ்தாபிதமாகியிருக்கும் நோயாளர் உரிமைகள் உரிய விதத்தில் இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஒழுங்கான அடிப்படையில் கணக்காய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றை நடத்துதல்

டிஜிட்டல் சுகாதாரத் தளத்தில் நோயாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்

- ☐ டெலி சுகாதார மற்றும் இலத்திரனியல் சுகாதாரப் பதிவுகள் என்பவற்றில் தனிநபர் சுகாதாரத் தகவல்களைப் பயன்படுத்துவது தொடர்பாக கண்டிப்பான ஒழுங்குவிதிகளை அமுல் செய்வதன் மூலம் இதனை மேற்கொள்ள வேண்டும்.
- ☐ - சுகாதாரப் பராமரிப்பு தொழில்நுட்ப பின்புலத்தில் தரவு அந்தரங்கத்தன்மை தொடர்பாகவும், பாதுகாப்பு தொடர்பாகவும் நோயாளர்கள் கொண்டிருக்கும் உரிமைகள் குறித்து அவர்களுக்கு கல்வியூட்டுதல்.

உளசமூக ஆதரவு மற்றும் நோயாளர் பராமரிப்பு

- ☐ பெருந்தொற்றிலிருந்து தோன்றும் மன நலம் தொடர்பான பிரச்சினைகளை கவனத்தில் எடுப்பதற்கென சுகாதாரப் பராமரிப்பு விநியோகத்துக்குள் உள சமூக ஆதரவை உள்வாங்குதல்.
- ☐ நோயாளர் கண்ணியம் மற்றும் அனைத்து நோயாளர்களுக்கும் தார்மீக ரீதியிலான சிகிச்சை அளிக்கப்படுதல் என்பவற்றுக்கு முன்னுரிமை அளித்தல். குறிப்பாக நீண்ட கொவிட் அல்லது ஏனைய பெருந்தொற்றுக்குப் பின்னரான சுகாதாரத் தாக்கங்களைக் கொண்டிருக்கும் நபர்களை கவனத்தில் எடுத்தல்

திட்டத்தை அமுல் செய்தல்

பங்கீடுபாட்டாளர்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளல்

- ☐ அரசாங்க அமைப்புக்கள், சுகாதார பராமரிப்பை வழங்குபவர்கள், சட்ட வல்லுனர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களை உள்ளடக்கிய விதத்தில் பன்முக வீச்சிலான, பன்முகப் பங்கீடு பாட்டாளர்களுடன் செயற்படுதல். இந்தக் கொள்கை முன்மொழிவின் அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் என்பவற்றை அவர்களுக்குத் தெரிவிப்பதற்கென இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

வரைவு தயாரிப்பு மற்றும் அமுலாக்கல் செயன்முறைகளின் போது அரசாங்க நிறுவனங்கள், சுகாதாரப் பராமரிப்பு வழங்குனர்கள், நோயாளர் பரப்புரைக் குழுக்கள் மற்றும் சட்ட நிபுணர்கள் ஆகிய தரப்புக்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளல்.

சிவில் சமூகத்துடன் கூட்டாக இணைந்து செயற்படுதல்

- ☐ நோயாளர்களின் உரிமைகள் தொடர்பாகவும், பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் சுகாதாரப் பராமரிப்பு சேவையை அணுகுவது தொடர்பாகவும் பரப்புரைகளை முன்னெடுப்பதற்கென சிவில் சமூக அமைப்புக்கள், அரசு சாரா அமைப்புக்கள் மற்றும் சர்வதேச முகவரகங்கள் என்பவற்றுடன் கூட்டாக இணைந்து செயற்படுதல்.
- ☐ கொள்கை உருவாக்கச் செயன்முறையில் நோயாளர்களின் குரல்களை வலுவாக ஒலிப்பதற்கும், பொருளாதார சீர்த்திருத்தங்கள் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அதில் பிரதிநிதித்துவப்படுத்துவதனை

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அடிமட்டத்தில் செயற்பட்டு வரும் இயக்கங்களை ஊக்குவித்தல்.

நிதிசார் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல்

பெருந்தொற்றின் போதும், அதன் பின்னரும் அதியுயர் மட்டங்களில் சுகாதார பராமரிப்புத் துறை தொடர்பான பாரிய முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் என்பன அம்பலப்படுத்தப்பட்டன. தரம் குறைந்த மருந்துகளின் கொள்வனவு மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது அநாவசியமான மருந்துகளின் கொள்வனவு என்பன இந்த முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கை குறைவடைவதற்குப் பங்களிப்புச் செய்திருந்தன.

சுகாதாரப் பராமரிப்புக்கு நிதியளிப்பினை ஒதுக்குவதில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவது அவசியமாகும். நோயாளிகளின் உரிமைகளை பராமரிப்பதற்கும், பொருளாதார சீர்த்திருத்தங்களின் இடையூறுகளுக்கு மத்தியிலும் கூட, நோயாளிகளின் உரிமைகளை பராமரிப்பதற்கும், தரமான பராமரிப்பை வழங்குவதற்கும் வளங்கள் நெறிப்படுத்தப்பட்ட விடயம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளை கண்காணிப்பதற்கும், வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும் வெட்டுக்கள் நோயாளர் உரிமைகள் மற்றும் பராமரிப்பு என்பவற்றின் மீது மோசமான விதத்தில் தாக்கங்களை ஏற்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்குமென சுயாதீனமான கண்காணிப்பு அமைப்புக்களை ஸ்தாபிப்பதற்கென பரப்புரைகளை மேற்கொள்ளல்.

நிதிப்படுத்தல் மற்றும் வளங்கள்

- அரசாங்க வரவு செலவுத் திட்டங்கள், சர்வதேச நிதியுதவி மற்றும் அரசு சாரா அமைப்புக்களுடனான கூட்டுச் செயற்பாடுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் அமுலாக்கலுக்குத் தேவையான நிதிப்படுத்தலுக்கான மூலங்களை அடையாளம் காணுதல்.

சுகாதாரப் பராமரிப்புத் துறை சீர்த்திருத்தங்களுக்கூடாக நோயாளர்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு பாரதூரமான விதத்தில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்ற விடயத்தை பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுதல்.

கால அட்டவணையை அடையாளம் காணுதல்

- கொள்கையை 3 - 5 வருட காலப் பிரிவின் போது அமுல் செய்வதற்கென கட்டம் கட்டமாக ஒரு அணுகுமுறையை அபிவிருத்தி செய்தல் சட்டவாக்கம், பயிற்சி மற்றும் பொது மக்களுக்கான விழிப்புணர்வூட்டும் பிரச்சார இயக்கங்கள் என்பவற்றுக்கென திட்டவட்டமான கால வரையறைகள் குறிக்கப்படுதல் வேண்டும். இது ஒரு மாற்ற முகாமைத்துவ செயன்முறையில் நம்பிக்கையை கட்டியெழுப்பும்.

## முடிவுரை

கொவிட் - 19 பெருந்தொற்று உடனடியாக, வினைத்திறன்மிக்க விதத்தில் கையாள வேண்டியிருக்கும் சுகாதாரப் பராமரிப்பு முறைமையில் நிலவி வரும் குறைகளை எடுத்துக் காட்டியது.

இலங்கை பொருளாதார நெருக்கடி மற்றும் கட்டமைப்பு ரீதியான சீர்த்திருத்தங்கள் என்பவற்றுடன் கூடிய மேலதிக சவால்களையும் இப்பொழுது எதிர்கொண்டு வருகின்றது. இந்த நிலையில், நோயாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் விடயத்துக்கு முன்னுரிமை வழங்குவது அத்தியாவசியமானதாகும்.

கண்ணியம், மரியாதை மற்றும் அனைத்து நோயாளர்களும் ஏற்றத்தாழ்வற்ற விதத்தில் பராமரிப்பினை அணுகக் கூடிய வசதி என்பவற்றை பாதுகாக்கும் வளைந்து கொடுக்கும்

# கொவிட தொற்றுக்குப் பின்னரான இலங்கையில் நோயாளர்களின உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல்

திறனுடன் கூடிய ஒரு சுகாதாரப் பராமரிப்பு முறையை உருவாக்குவதே இந்தக் கொள்கை முன்மொழிவின் நோக்கமாகும்.

கடினமான கால கட்டங்களில் நோயாளர்களின் உரிமைகளை மேம்படுத்துவது ஒரு சட்ட ரீதியான தேவையாக மட்டும் இருந்து வரவில்லை அது தேசத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மற்றும் நலனோம்பலுக்கு இறுதியில் பங்களிப்புச் செய்யும் ஒரு தார்மீக ரீதியான கடப்பாடாகவும் இருந்து வருகிறது. இலங்கை இந்த வழிமுறையை பின்பற்றுவதன் மூலம் பொருளாதார சவால்கள் இடம்பெறும் கால கட்டங்களிலும் கூட நோயாளர் உரிமைகள் சுகாதாரப் பராமரிப்புக் கொள்கைகளின் முன்னணியில் இருந்து வருவதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

நோயாளர்களின் உரிமைகள் தொடர்பாக முழுமையாக கவனம் செலுத்தும் இந்தக் கொள்கை முன்மொழிவை பின்பற்றுவதன் மூலம் இலங்கை சுகாதாரப் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்தி, நோயாளர்களுக்கு வலுவூட்டி, எதிர்காலத்துக்கென பெருமளவுக்கு வளைந்து கொடுக்கும் ஆற்றலுடன் கூடிய ஒரு சுகாதாரப் பராமரிப்பு முறையை கட்டியெழுப்ப முடியும். நோயாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது என்பது வெறுமனே ஒரு சட்ட ரீதியான கடப்பாடாக மட்டும் இருந்து வரவில்லை. அதற்குப் பதிலாக, அது ஒரு தார்மீக தேவையாக இருந்து வருகிறது. கொவிட் தொற்றுக்குப் பிற்பட்ட இலங்கையில் அனைத்துப் பிரஜைகளின் ஆரோக்கியத்துக்கும், நல்வாழ்வுக்கும் அது அத்தியாவசியமானதாகும்.